**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை -6**

ந.க.எண் 033257/எம்2/இ2/2025 நாள். 09.07.2025.

| | |
|---|---|
| பொருள்- | பள்ளிக்கல்வி – அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் - 8 முதல் 12ஆம் வகுப்பு - பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான தமிழ்க் கலைச்சொல்லாக்கம் மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்துதல் - தொடர்பாக. |
| பார்வை - | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கடிதம், ந.க.எண்.468/2025, நாள்01.07.2025. |

---

பார்வை 1ல் காணும் கடிதத்தில் கீழ் குறித்தவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் சார்பில் ஆண்டுதோறும் நவம்பர்- 08ஆம் நாள் "தமிழ் அகராதி இயல் நாள் விழா" கொண்டாடப்பட்டு வருவதாகவும் இது குறித்து அரசாணை (நிலை) எண்.139, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2-2)த் துறை நாள்.05-11-2019-இன்படி மாநில அளவிலான ஓவியப்போட்டி மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டிகள் நடத்தி பரிசு, பாராட்டுச்சான்றுதழ் வழங்கி சிறப்பிக்கபெற்று வருகிறது.

மாநில அளவிலான ஓவியப்போட்டி மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக மாவட்ட அளவில் போட்டிகளை நடத்தி தெரிவு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு போட்டிக்கு ஒருவர் என முதன்மைக்கல்வி அலுவலர் வழியாக பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் பெயர்ப்பட்டியலை அனுப்பிவைக்க வேண்டும்.

கலைச் சொல்லாக்கப்போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்கள் பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு தொகை ரூ.10,000/-, இரண்டாம் பரிசு தொகை ரூ.5,000/- என இரு போட்டகளுக்கும் ஆக மொத்தம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி சிறப்பிக்கப் பெறுவர். இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவருக்கும் அரசின் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

19.08.2025 அன்று மாநில அளவில் நடைபெறவுள்ள கலைச்சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் பங்கேற்பதற்கு, ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்களை மட்டும் தெரிவு செய்து அவர்களின் பெயர், விவரங்களை இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் sollakamoviyam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.07.2025ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

SCAN AnyScanner

மேலும், கலைச்சொல்லாக்கப்போட்டி மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தும் பொருட்டு பார்வையில் காணும் கடித நகல் அதன் இணைப்புகள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு - பார்வையில் காணும் கடித நகல் மற்றும் இணைப்புடன்.

பள்ளி கல்வி இயக்குநர்

09.07.25

பெறுநர்

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,

முதன்மைக் கல்வி அலுவலகம்,

அனைத்து மாவட்டங்கள்.

நகல்

இயக்குநர்,

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,

சென்னை 28.

AnyScanner

திருமதி க.பவானி எம்.ஏ.,
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்

நகர் நிருவாக அலுவலக வளாகம்
எண்.75, முதல் தளம்
சாந்தோம் நெடுஞ்சாலை
எம்.ஆர்.சி. நகர், சென்னை - 600 028.
மின்னஞ்சல் முகவரி: dir.dtedp@tn.gov.in
தொலைபேசி எண் : ☎ 044 - 29520509

**ந.க.எண். 468/2025, நாள் : 01.07.2025**

திருவள்ளுவர் ஆண்டு 2056, ஆனி - 17

பெறுநர் :

இயக்குநர்
பள்ளிக் கல்வி இயக்ககம்
கல்லூரிச் சாலை
நுங்கம்பாக்கம்
சென்னை - 600 006.

அன்புடையீர்,

வணக்கம்.

**பொருள் :** செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் - 2019-2020 சட்டப்பேரவை அறிவிப்பு - **"ஆண்டுதோறும் 'தமிழ் அகராதியியல் நாள் விழா கொண்டாடுதல்"** - 2025ஆம் ஆண்டுக்கான 'தமிழ் அகராதியியல் நாள் விழா' - பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்துதல் - மாணவர்களின் பெயர் மற்றும் பள்ளி விவரங்கள் அனுப்பக் கோருதல் - தொடர்பாக.

**பார்வை :**
1. 2019-2020ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவை அறிவிப்பு, நாள் 18.07.2019.
2. தமிழ்வளர்ச்சி (ம) செய்தி (தவ2-2)த் துறை அரசாணை (நிலை) எண்.139, நாள் 05.11.2019.

••••••

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில், ஆண்டுதோறும் நவம்பர் 8ஆம் நாள் **"தமிழ் அகராதியியல் நாள் விழா"** கொண்டாடப்பட்டு வருகிறது. இது தொடர்பில், பள்ளி மாணவ மாணவியருக்கு பார்வையில் (2)இல் காணும் அரசாணையின்படி மாநில அளவிலான ஓவியப்போட்டி மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டிகள் நடத்தி பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பெற்று வருகிறது.

2) மாநில அளவிலான ஓவியப் போட்டி மற்றும் கலைச்சொல்லாக்கப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக, மாவட்ட அளவில் போட்டிகளை நடத்தி தெரிவு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு போட்டிக்கு ஒருவர் என முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் பெயர்ப் பட்டியலை அனுப்பிவைக்க வேண்டும்.

AnyScanner

3) கலைச் சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்கள் பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு தொகை ரூ.10,000/-, இரண்டாம் பரிசு தொகை ரூ.5,000/- என இரு போட்டிகளுக்கும் ஆக மொத்தம் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி சிறப்பிக்கப் பெறுவர். இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவருக்கும் அரசின் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

4) 19.08.2025 அன்று மாநில அளவில் நடைபெறவுள்ள கலைச்சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் பங்கேற்பதற்கு, ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்களை மட்டும் தெரிவு செய்து அவர்களின் பெயர், விவரங்களை இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் sollakamoviyam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.07.2025ஆம் நாளுக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இயக்குநர் (மு.கூ.பொ.)

AnyScanner

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை-28.

ந.க.எண். 468/2025, நாள் : 01.07.2025

## பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான தமிழ்க் கலைச்சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிக்கான விவரங்கள்/நெறிமுறைகள்

### போட்டி விவரங்கள்

1) **கலைச்சொல்லாக்கப் போட்டி**

கலைச்சொல்லாக்கப் போட்டி என்பது, மாணவர்களிடையே ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை வடிவமைக்கும் ஆற்றலை வளர்த்தெடுப்பதாய் அமையும்.

(எ.டு) Gulab Jamun - தேங்கோளி Cyber Crime - இணையதளக் குற்றம்

**ஓவியப் போட்டி**

ஓவியப் போட்டி என்பது மாணவர்களிடையே தமிழ்ச் சொற்கள் அறிதலையும் அவற்றிற்கான பொருள் புரிதலையும் ஏற்படுத்தி, கொடுக்கப்படும் சொற்களின் பொருளறிந்து அதற்கேற்ற படம் வரைவதன் மூலம் அவர்களின் ஓவியத்திறனையும் ஊக்குவிப்பதாக அமையும்.

(எ.டு) "வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்
குளிரும் <u>மஞ்சை</u>யும் கொண்டலும் காக்கும்" - என்ற பாடலில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் எழுதி படம் வரைய வேண்டும்.

சான்று : மஞ்சை - மயில்

### போட்டிகளுக்கான நெறிமுறைகள்

- இப்போட்டிகளில் **அரசுப் பள்ளி (ம) அரசு உதவிபெறும் பள்ளிகளி**ல் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் **போட்டி நடைபெறும் 19.08.2025ஆம் நாள் காலை 09.00 மணிக்கு**ள் *"சென்னை-600 028, எம்.ஆர்.சி. நகர், சாந்தோம் நெடுஞ்சாலை, எண்.75, முதல் தளம், நகர் நிருவாக அலுவலக வளாகத்தில்"* அமைந்துள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் தங்கள் வருகையை பதிவு செய்ய வேண்டும்.
- ஓவியப் போட்டிக்கான வினாக்கள் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடங்களிலிருந்து இடம்பெறும்.
- படங்கள் வரைவதற்கான வண்ணக்கோல், வண்ணப்பூச்சு, கரிக்கோல், வரைபடத்தாள் உள்ளிட்ட பொருள்களுடன் வர வேண்டும்.
- சொல்லாக்கப் போட்டியில், மக்களின் பேச்சுவழக்கு (ம) ஊடகங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலம்/பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைக்கும் வகையில் வினாக்கள் அமையும்.
- ஏற்கெனவே இப்போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்கள் மீண்டும் பங்கேற்கக் கூடாது.
- இரு போட்டிகளிலும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- ஒவ்வோர் போட்டியிலும் இருவருக்கு மட்டுமே பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசு ரூ.10,000/-, இரண்டாம் பரிசு ரூ.5,000/-. மாநிலப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பெறும்.
- போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மட்டும் இருவழி அரசு பேருந்து/தொடரிக்கான பயணக்கட்டணம் அரசு வரையறுத்தபடி வழங்கப்பெறும்.

இயக்குநர் (மு.கூ.பொ.)

AnyScanner

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை-28.

ந.க.எண். 468/2025, நாள்: 01.07.2025

2025ஆம் ஆண்டு மாநிலப் போட்டி

தமிழ்க் கலைச்சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டி

**விண்ணப்பப் படிவம்**

| விண்ணப்பம் வந்து சேரவேண்டிய<br>கடைசி நாள் : 31.07.2025<br>போட்டி நாள் : 19.08.2025 | | தொடர்பு கொள்ள வேண்டிய<br>அலுவலர் (ம) எண். : திருமதி ஜெ. சாந்தி<br>9585013612 |
|---|---|---|
| மாணவர் பெயர்<br>(ஒளிப்படம் ஒட்டவும்) | : | |
| வகுப்பு | : | |
| பள்ளியின் பெயர்/முகவரி/<br>மின்னஞ்சல் முகவரி | : | |
| மாவட்டம் | : | |
| போட்டியின் பெயர் | : | |
| தொடர்பு எண் (பயன்பாட்டிலுள்ள புலனை (Whats app. No/) எண். | : | பெற்றோர் :<br>வகுப்பு ஆசிரியர்:<br>தலைமையாசிரியர்: |
| மாணவர் பெயரிலுள்ள வங்கிக் கணக்கு எண். | : | Name: (வங்கிக் கணக்கில் உள்ளபடி ஆங்கிலத்தில்)<br>Ac.No.: Branch:<br>IFSC Code: |
| மாணவரின் கையொப்பம் | : | |

தலைமையாசிரியரின் பரிந்துரை :

.............................................. மாவட்டம் ........................................................................ பள்ளியில் ............ வகுப்பு பயிலும் ........................................................ மாணவர்/மாணவி ................................................ போட்டியில் கலந்துகொள்ள பரிந்துரைக்கப் பெறுகிறார்.

நாள் :

மாவட்டம் :

தலைமையாசிரியர் ஒப்பம் / முத்திரை